UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2013**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*8412420732*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

DC (SJF/SW) 61258/4
© UCLES 2013

UNIVERSITY *of* CAMBRIDGE International Examinations

**[Turn over**

https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2013


https://xtremepape.rs/

## Section A – Translation

**1** Translate into **English**.

நர்ஸரி பள்ளிக்கூடத்தில் அன்று விளையாட்டு தினம். எல்லாக் குழந்தைகளையும் கால்சட்டை, டீஷர்ட்டு, விளையாட்டுக்கு வேண்டிய காலணி(சப்பாத்து) அணிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இரண்டு ஆசிரியர்கள் ஒரு பழரசம் விற்கும் கடை வைத்தனர். பெற்றோர்கள் ஓரத்தில் நின்று கொண்டு குழந்தைகளுக்குக் கைகளை ஆட்டினார்கள். குழந்தைகளை அமைதியாக வைத்திருக்க ஆசிரியர்கள் கஷ்டப்பட்டார்கள்.

ஐந்து விதமான பந்தயங்கள் விளையாடத் தீர்மானித்தனர். அவையாவன: ஸ்பூன்/முட்டை பந்தயம், நடுவில் தடங்கல்கள் வைத்து ஓடுவது, சாக்குப் பந்தயம், குதித்து ஓடும் பந்தயம், பெற்றோர்களும் குழந்தைகளும் சேர்ந்து ஓடும் பந்தயம். ஒவ்வொரு பந்தயத்திலும் முதலில் வெற்றி பெற்றவருக்கு பரிசுப்பதக்கமும், இரண்டாவதாக வந்தவருக்கு ஆறுதல் பரிசும் கொடுக்கப்பட்டன.

பிறகு ஓடினவர்கள் எல்லாரும் பழரசங்கள் குடிக்கப்போனார்கள். பெற்றோர்கள் ஓடினவர்களைக் கைதட்டி உற்சாகப் படுத்தினார்கள். பிறகு கடைசியில் அவர்களும் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டார்கள். பெற்றோர்களும் குழந்தைகளும் சந்தோஷமாக ஆசிரியர்களுக்கு நன்றி கூறினார்கள். அப்புறம் பெற்றோர்கள் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வீட்டிற்குப் போனார்கள்.

[10]

**2** Translate into **Tamil**.

Three horses lived in a stable next to the farm house. The farmer's son and daughter would often take them for a ride out in the fields and down the village streets.

One morning, the sun was shining and the horses were outside in the field. The farmer noticed a fox trying to steal one of his chickens and fired his gun to scare the fox away. The horses were frightened and ran across the field. One of the horses jumped over the fence and disappeared down the lane. The other two horses stopped at the fence.

The farmer's daughter and her brother picked up two saddles and a rope to catch the escaped horse. They mounted the two horses that were still in the field and followed.

Two young farm helpers indicated the direction that the first horse had gone. The girl and boy raced down the road. Then they saw the escaped horse eating grass in the next field. Slowing down, they prepared the rope and approached the horse quietly. Gently, they put it over the horse's head and led him back to the stable.

[20]

© UCLES 2013



https://xtremepape.rs/

## Section B – Reading Comprehension

Do **not** translate the passage below. First read it carefully and then answer, briefly and in **Tamil**, the questions that follow.

### ஒலிம்பிக் விளையாட்டுகள்.

ஒலிம்பிக் விளையாட்டுகள் 2,500 வருடங்களுக்கு மேலாக நடந்து வருகின்றன. கிரீஸ் தேசத்தில் உள்ள "ஒலிம்பியா" என்ற இடத்தில் தான் முதலில் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடந்து வந்தது. அந்தத் தொடர்பினால் "ஒலிம்பிக்" என்ற பெயர் வந்தது. முதலில் "ஸீயஸ்" என்ற கிரேக்க தேசத்துக் கடவுளை கௌரவிப்பதற்காக ஒரு மாதத்திற்கு மதசம்பந்த விழாவாகக் கொண்டாடப்பட்டது. கிரேக்க நாட்டு மக்களும் கிரேக்க நாடும் இதில் பங்கு கொண்டன. ஓட்டப்பந்தயங்களும் கிரேக்க நாட்டு கடவுளுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளும் நடக்கும். பழைய காலத்தில் கிரேக்க நாட்டு மக்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டனர். அதனால் ஒலிம்பியாவுக்குப் பக்கத்தில் உள்ள "எலிஸ்" என்ற டவுனிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்னால் தூதுவர்கள் கிளம்பி எல்லா இடமும் போய் சண்டை போடக் கூடாது என்று அறிவிப்பார்கள். இதனால் பங்கு கொள்பவர்கள் ஒலிம்பியாவிற்கு பாதுகாப்பாகப் போய் வர முடிந்தது.

ஹோமர், ஒரு பிரசித்தி பெற்ற கிரேக்க கவிஞர். கிறிஸ்து பிறப்பதற்கு 776 வருடங்களுக்கு முன்னால் தன் கவிதைகளில் விளையாட்டுகள் நடந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு புன்னைமர இலைகளால் மாலைகள் செய்து, பார்க்க வந்திருக்கும் 50,000 மக்கள் முன்னால் சூட்டுவார்கள். அவர்கள் தங்கள் ஊருக்குப் போகும் போது பணமும் ஆலிவ் எண்ணெயும் பரிசாகக் கொடுப்பார்கள். இவர்களை வெற்றி வீரர்களாகப் பாராட்டுவார்கள். சில சமயங்களில் இவர்களுக்குச் சிலைகளும் எழுப்புவார்கள்.

இதே மாதிரியே கிறிஸ்து பிறந்த பிறகு 394 ஆண்டு வரை நடந்து வந்தது. இந்தக் காலத்தில் கிரீஸ் நாடு ரோமாபுரியில் ஆண்டுவரும் கிறிஸ்தவ ராஜ்யத்தின் கீழ் வந்தது. இவர்கள் உடனே கிறிஸ்தவ மதத்தை மதிக்காமல் கிரேக்கநாட்டுக் கடவுளை கௌரவிப்பதற்காக நடக்கும் விளையாட்டுகளை நிறுத்திவிட்டனர், 1,500 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு பியரே டி கூபர்டின் என்ற பிரெஞ்சுக்காரர் ஒலிம்பிக் விளையாட்டுகளை இக்காலத்திற்கேற்றவாறு அமைத்தார். இவர் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஒன்றையும் அமைத்தார். இந்தக் கமிட்டியும் முன்னால் இருந்த மாதிரி 4 வருடத்திற்கு ஒரு முறை விளையாட வேண்டும் என்றும், ஒவ்வொரு தடவையும் வேறு வேறு ஊர்களில் நடக்க வேண்டும் என்றும் தீர்மானம் செய்தது. இப்படி மாற்றியபிறகு முதலில் 1896 ம் ஆண்டு கிரேக்க நாட்டில் ஏதென்ஸில் நடைபெற்றது. பாரிஸில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டில் பெண்களும் கலந்து கொண்டனர். அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அடிக்கடி நவீன ஒலிம்பிக் விளையாட்டுகளில் நுழைந்து விடுகிறது. இரண்டு உலகப் போரினால் ஒலிம்பிக் விளையாட்டுகள் பல வருடங்களுக்கு நடக்கவில்லை. 1936 ம் ஆண்டு பெர்லினில் நடந்த விளையாட்டுகளில் ஜெர்மனி நாட்டு மக்கள் அவர்கள் வெள்ளையர்கள் என்ற மேம்பாட்டால் ஜெஸி ஓயென்ஸ் என்ற அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு கருப்பு விளையாட்டு வீரர் 4 தங்கப்பதக்கங்கள் பெற்றதை ஒரு பிரச்சனையாகப் பார்த்தனர். தற்காலத்திலும் தங்கப் பதக்கங்கள் தான் பரிசாகக் கொடுக்கப்படுகின்றன.

வருடா வருடம் ஒலிம்பிக் விளையாட்டின் புகழ் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆரம்பத்தில் 1896 ம் ஆண்டு 14 நாடுகளிலிருந்து 241 அங்கத்தினர்கள்

© UCLES 2013


https://xtremepape.rs/

விளையாட்டுகளில் பங்கெடுத்துக் கொண்டனர். ஆனால் 2008 ம் ஆண்டு 204 நாடுகளும் 10,500 விளையாட்டு வீரர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். முக்கிய விளையாட்டுக்காரர்களைப் பார்க்க மக்கள் கூட்டமாக வந்து விளையாட்டு வீரர்கள் முன்னால் செய்த சாதனைகளைத் தோற்கடித்ததைப் பார்த்தனர்.

ஒலிம்பிக் விளையாட்டுகள் முதலில் கோடைகாலத்தில் மட்டும் விளையாடினார்கள். ஆனால் இப்பொழுது குளிர்காலத்திலும் ஒலிம்பிக் விளையாட்டுகள் விளையாடுகின்றனர். ஊனமுற்றோரும் இளைஞர்களும் ஒலிம்பிக் விளையாட்டுகளில் பங்கு கொள்கின்றனர். ஒலிம்பிக் விளையாட்டுகள் எல்லா நாடுகளிலும் வெற்றிகரமாக நடப்பதால் பல அலுவலகங்கள் விளம்பரங்கள் கொடுக்க விரும்புகின்றனர். இப்பொழுது பயிற்சி இல்லாத வீரர்கள் மட்டும் இல்லாமல் பயிற்சி பெற்ற வீரர்களும் விளையாட்டுகளில் பங்கு கொள்கின்றனர். உலகம் முழுவதும் தொலைக்காட்சியில் காட்டுவதனாலும் விளம்பரங்கள் அதிகம் இருப்பதாலும் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்கள் அதிகப் பணம் சம்பாதிக்க முடிகிறது.

Now answer the following questions briefly, using your own words as far as possible.

**3** "ஒலிம்பிக் விளையாட்டுகள்" என்ற பெயர் எப்படி வந்தது? [1]

**4** பழைய காலத்தில் கிரேக்க நாட்டில் பிரயாணம் செய்வது கஷ்டமாக இருந்ததற்கு என்ன காரணங்கள் கூறப்பட்டுள்ளன? [2]

**5** பழைய காலத்தில் விளையாட்டுகள் நடந்தன என்பதற்கு என்ன ஆதாரங்கள் இருக்கின்றன? [1]

**6** பழைய காலத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு எப்படிப் பரிசுகள் கொடுத்தார்கள்? [3]

**7** யார் இந்த விளையாட்டை 394AD ல் நிறுத்தினார்கள்? [1]

**8** யார் இந்த விளையாட்டைத் திரும்பவும் ஆரம்பித்தார்? அவருடைய முக்கியமான கொள்கைகள் என்ன? [4]

**9** நவீன கால விளையாட்டுகளை ஏன் கிரேக்க நாட்டில் உள்ள ஏதென்ஸில் ஆரம்பித்தார்கள் என்று நீ நினைக்கிறாய்? [2]

**10** நவீன காலத்தில் அரசியலால் எவ்வாறு ஒலிம்பிக் விளையாட்டுகள் பாதிக்கப் பட்டன? [2]

**11** ஒலிம்பிக் விளையாட்டுகள் வெற்றிகரமாக நடக்கின்றன என்பதற்கு நான்கு உதாரணங்கள் கூறவும். [4]

Language and spelling [5]

**Total Marks [25]**



https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2013


https://xtremepape.rs/

**BLANK PAGE**

© UCLES 2013


https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2013 

https://xtremepape.rs/